सर्वात्मन्सर्वभूतेश सर्वसत्त्व समुद्भव।

सर्वभूतो भवान्वेत्ति सर्वसत्त्व मनोरथम्॥

*ஸர்வாத்மந் ஸர்வபூதேச ஸர்வஸத்த்வ ஸமுத்பவ|*
*ஸர்வபூதோ பவாந் வேத்தி ஸர்வ ஸத்த்வ மநோரதம்||* (1-12-73)

*"அனைத்திற்கும் காரணமாயும், அனைத்தையும் வியாபித்து, அனைத்துள்ளும் அந்தர்யாமியாயும் தேவரீரே இருக்கின்றீர். ஆகையினால் தேவரீர் அடியேனின் மநோரதத்தை நன்கு அறிந்திருப்பீர்."*

यो मे मनोरथो नाथ सफलः सत्वया कृतः।

तपश्च तप्तं सफलं यद्दृष्टोऽसि जगत्पते॥

*யோ மே மநோரதோ நாத ஸபல: ஸ த்வயா க்ருத:|*
*தபஶ்ச தப்தம் ஸபலம் யத் த்ருஷ்டோ(அ)ஸி ஜகத்பதே||* (1-12-74)

*"ஹே ஜகத்பதே! அடியேன் விண்ணப்பம் செய்ய வேண்டுவது என்ன? அடியேன் தேவரீரை ப்ரத்யக்ஷமாகப் பார்த்து தெண்டன் சமர்ப்பித்தேனாகையினாலே அடியேனின் தவமும் பலித்தது. அடியேனின் அனைத்து மநோரதங்களும் நன்கு பூர்த்தியாகி மிக்க க்ருதார்த்தனானேன்."*

*என்று துருவன் எம்பெருமானைத் துதி செய்தான்.*

இவ்விதம் துதித்த துருவனைக் கண்ட பகவான் ஸ்ரீ விஷ்ணு, *"ஹே அரச குமாரனே! நீ என்னை ஸாக்ஷாத்தாகக் கண்டு வணங்கியதினால் உன்னுடைய தவம் பலித்ததென்பது சரியே. நான் யாருக்கு ப்ரத்யக்ஷமாகின்றேனோ, அவர்களுடைய ஸகல மநோரதங்களும் நிச்சயம் கைகூடும். இருப்பினும் நான் உனக்கு ஸேவை ஸாதித்தது வ்யக்தமாகக்கூடாது. ஆகையினால் உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக"* என்று கூறினார்.

இப்படி அருள் பாலித்த எம்பெருமானிடம் துருவன் மிக்க விநயத்துடன், *ஹே தேவதேவனே! ஸர்வாந்தர்யாமியாகிய தேவரீருக்கு அடியேனது உள்ளக் கிடக்கை கட்டாயம் தெரிந்தே இருக்கும். இருப்பினும் தேவரீர் நியமித்ததினால் விஜ்ஞாபனம் செய்கிறேன். இந்திரன் தேவரீருடைய அநுக்ரஹத்தினாலன்றோ த்ரிலோகத்தையும் ஆள்கின்றான். ஹே ஜனார்த்தன! ஸுருசியின் கர்ப்பத்தில் அடியேன் பிறக்காததினால் ராஜ ஸிம்ஹாஸனத்திற்கு அடியேன் அருகதையற்றவனென்று அடியேனைப் பார்த்து இறுமாப்புடன் அவள் ஏளனம் செய்தாள். ஆகையினால் இவ்வுலகிற்கு ஆதாரமும், மிக உயர்ந்ததும், அவ்வயமுமான உன்னத ஸ்தானத்தை அடையவே அடியேன் விரும்புகின்றேன். இதற்குத் தேவரீர் திருவருள் புரிய வேண்டும்"* என்று பிரார்த்தித்தான்.

இவ்விதம் ப்ரார்த்தித்த துருவனை எம்பெருமான் குளிர கடாக்ஷித்து, *"ஹே பாலகனே! நீ விரும்பிய பதவியை அடையக் கடவாய். இதற்குக் காரணம் வேறொன்றும் உண்டு.*

*அதைச் சொல்கிறேன் கேட்பாயாக. நீ பூர்வ ஜன்மத்திலே ஒரு பிராம்மணனாகப் பிறந்து உனது தாய் தந்தையருக்குப் பணிவிடைகள் செய்தும், என்னை ஏகாக்ர சிந்தையுடன் ஆராதித்தும் வந்தாய். நீ யௌவன பருவமடைந்தபொழுது, ஸகல ஆபரணங்களையும் அணிந்து கொண்டவனும், எல்லாவித போகங்களையும் அநுபவிப்பவனும், மிக்க அழகுடைய ஶரீரத்தைக் கொண்டவனுமான ஒரு ராஜகுமாரன் உனது உற்ற நண்பனானான்.*

*அவ்வமயம் நீ அவனது ஐஶ்வர்ய போகங்களைக் கண்டு ஆசைப்பட்டு, நீயும் அவனைப் போன்றே ராஜ குமாரனாகப் பிறக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாய். ஆகையினால், நீ ஆசைப்பட்ட ப்ரகாரமே உத்தானபாதனது அரண்மனையில் அவனுக்கு மகனாகப் பிறந்தாய். என்னைத் துதிக்காத மற்றெவருக்கும் உலகத்தோரால் பூஜிக்கப்படுவதான சுவாயம்புவ மநுவின் வம்ஶத்தில் பிறவி ஏற்படுவதென்பது கிட்டாத ஒன்றாகும். இப்போது நீ உனது மஹத்தான தவத்தினாலும், அத்யந்த பக்தியினாலும் என்னை மகிழ்வித்தாய். என்னிடத்தில் நிலைநிறுத்திய மனதை உடையவனாய் எந்த ஒரு மனிதன் என்னை தியாநிக்கின்றானோ, அவன் வெகு விரைவில் அனைத்திற்கும் மேலானதான மோக்ஷத்தையே அடைகின்றபோது, அல்பமான ஸ்வர்க்கம் முதலான பலன்களை அடைவதில் வியப்பேதுமில்லையே.*

*நீயும் என்னுடைய அநுக்ரஹ விஶேஷத்தினால் மூவுலகங்களுக்கும் மேற்பட்டதாயும், ஸகல கிரக மற்றும் நக்ஷத்திரங்களுக்கு ஆதார பூதமானதும், சூர்யன், சந்த்ரன், அங்காரகன், புதன், பிரஹஸ்பதி முதலானோர்களின் ஸ்தானங்களுக்கும், நக்ஷத்ர மண்டலத்திற்கும், ஸப்த ரிஷிகளுடைய மண்டலத்திற்கும், சித்தர்கள் ஸஞ்சரிக்கும் உயர்ந்த ஸ்தாநங்களுக்கும் விமாநம் போன்றதான துருவ மண்டலம் என இனிவரும் காலங்களில் திகழப்போகின்ற அந்த மிக உன்னதமான ஸ்தாநத்தை அடைந்து, ஸுகமாக வாழ்வாயாக. சில தேவதைகள் சதுர் யுகம் வரையிலும், சில தேவதைகள் மங்வந்தரம் வரையிலும் வாழ்வார்கள்.*

*ஆனால், நீயோ எனது அநுக்ரஹத்தினால் கல்பம் முடியும் வரையிலான காலம் அந்த ஸர்வ உன்னத ஸ்தானமான துருவ மண்டலத்தில் சுகமாக வாழ்வாயாக. உனது தாயான ஸுநீதியும் மஹோங்நதமான திவ்ய விமானத்தில் ஏறிக்கொண்டு, நக்ஷத்ர ரூபமாக உன் அருகிலேயே இருந்து கொண்டு கல்பாந்தர பர்யந்தமும் பிரகாசிக்கக் கடவள். மேலும், வானத்திலே துருவ நக்ஷத்திரமாக திகழும் உன்னை எவனொருவன் அதிகாலையிலும், மாலையிலும் மிக்க மன உறுதியுடன் துதிக்கின்றானோ, அவன் மிக உயர்ந்த புண்ணியத்தை நிச்சயம் பெறுவான்"* என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வாறு எம்பெருமானான ஶ்ரீமங் நாரயணனிடம் வரத்தைப் பெற்ற துருவன் எல்லா உலகங்களுக்கும் மேற்பட்டதான துருவ மண்டலத்தை அடைந்தான். தனது தாய் தந்தையருக்கு பணிவிடை செய்ததினாலும், மிகச் சிறந்த தவ வலிமையினாலும், ஶ்ரீமத் த்வாதஶாக்ஷர மஹா மந்த்ரத்தின் மகிமையினாலும் மஹாத்மாவான துருவனுக்குக் கிட்டியதான அபிமானத்தையும் ஐஶ்வர்யத்தையும் பார்த்த அஸுர குருவான *சுக்கிராசார்யர்* மிகவும் திருவுள்ளம் மகிழ்ந்து போற்றியதை ஶ்ரீ பராஶரர், தனது சீடன் மைத்ரேயனிடம்,

*அஹோ(அ)ஸ்ய தபஸோ வீர்யம் அஹோ(அ)ஸ்ய தபஸ: பலம்|*
*யதேநம் புரத: க்ருத்வா த்ருவம் ஸப்தர்ஷய: ஸ்திதா:||* (1-12-99)

*"அஹோ! இந்த துருவனின் தவத்தின் மஹிமைதான் என்ன? அஹோ! இவனது தவத்தின் அற்புத பலன்தான் என்ன? எந்த மஹாத்மாவைக் குறித்துக் கொண்டு ஸப்த ரிஷிகளும் ஸஞ்சரிக்கின்றனரோ, அந்த மஹாத்மாவான துருவனின் தபோ பலத்தின் சிறப்பை என்னவென்று வர்ணிப்பேன்.?*

*த்ருவஸ்ய ஜனனி சேயம் ஸுநீதிர் நாம ஸூந்ருதா|*
*அஸ்யாஶ்ச மஹிமாநம் க: ஶக்தோ வர்ணயிதும் புவி||* (1-12-100)

*ஹிதமும் ஸத்யமுமான வாக்கைக் கொண்ட துருவனின் தாயான ஸுநீதியின் ப்ரபாவங்களை வருணிக்கத் தகுந்தவர்களான கவிகளும் இவ்வுலகில் உளரோ?*

*த்ரைலோக்ய ஆஶ்யதாம் ப்ராப்தம் பரம் ஸ்தானம் ஸ்திராயதி|*
*ஸ்தானம் ப்ராப்தா பரம் த்ருவா யா குக்ஷிவிவரே த்ருவம்||* (1-12-101)

*அந்த ஸுநீதி என்ற பெண்ணரசி துருவனைத் தனது கர்ப்பத்தில் தரித்ததினால், மிக உயர்ந்ததும், நிலையான தன்மையை உடையதுமான அந்த துருவ மண்டலமென்னும் திவ்ய ஸ்தானத்தை அடைந்தாள்.*

*யஶ்சை தத் கீர்த்தயேந் நித்யம் த்ருவஸ்ய ஆரோஹணம் திவி|*
*ஸர்வ பாப விநிர்முக்த: ஸ்வர்க லோகே மஹீயதே||* (1-12-102)

*துருவன் எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பதவியை அடைந்ததை, எந்த மனிதன் கீர்த்தனம் செய்வானோ, அவனுடைய ஸகல பாபங்களும் நீங்கப் பெற்று ஸ்வர்க்க லோகத்தில் நித்தியவாஸம் செய்வான்.*

*ஸ்தாந ப்ரம்ஶம் ந ச ஆப்நோதி திவி வா யதி வா புவி|*
*ஸர்வ கல்யாண ஸம்யுக்தோ தீர்க்க காலம் ஸ ஜீவதி||* (1-12-103)

*அன்றியும் அவன் வானுலகத்திலோ அல்லது இப்பூவுலகத்திலோ எங்கு வாஸம் செய்தாலும் அவனுடைய ஸ்தானத்திலிருந்து வழுவாமல் ஸகலவித ஸௌபாக்கியங்களைக் கொண்டவனாயும் நீண்ட ஆயுளை உடையவனாயும் வாழ்வான்."*

என்று கூறினார்.

ஸ்ரீ பராஶரர் அருளிச் செய்த ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் துருவ சரித்திர வாயிலாக இந்த *த்வாதஶாத்யாயத்தில் ஸ்ரீ வாஸுதேவ த்வாதஶாக்ஷரத்தின்* மஹிமையை அருளிச் செய்திருப்பதிலிருந்து இதன் ஒற்றுமையையும் சிறப்பையும் அனைவரும் அறிந்து கொள்ளத் தக்கவாறு அமைந்திருக்கின்றதென்பது நம் பூர்வர்களின் திருவுள்ளம்.

*இதி ஸ்ரீ விஷ்ணு புராணே ப்ரதமே(அ)ம்ஶே த்வாதஶோ(அ)த்யாய:|*

* * * * * * * * * * * *